(ஆ) முதலமைச்சர் சினிமாவில் நடிக்க பதவி விலக இருப்பது குறித்து

திரு நா. சுந்தரராஜ் ; முதலமைச்சர் மட்டும் ராஜிநாமாச் செய்யப் போகிறாரா? இல்லையென்றால் சர்க்காரைக் கலைத்து விட்டுப் போகப் போகிறாரா? அவர் ராஜிநாமாச் செய்தால் எல்லோரும் போன மாதிரிதான்;....

நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தப் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு சினிமாவில் நடிக்கப் போவதாகவும், அவர் நடிக்க இருக்கிற படம் தீபாவளியன்று திரையிடப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இது ஒழுங்குப் பிரச்சினைக்கு உகந்தது அல்ல.

திரு. சி. ஆறுமுகம் : அவரே பேசியிருக்கிறார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக்கும்போது இந்தப் பிரச்சினையை எழுப்பினால் நலமாக இருக்கும்,

திரு. துரை முத்துசாமி : பத்திரிகையில் பல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையில் பல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன என்று கூறி அதைப் பிரச்சினையாகக் கொண்டு இங்கு ஒழுங்குப் பிரச்சினைகள் எழுப்புவது முறையானது அல்ல. இந்த அவையின் மரபுக்கும் அது உகந்தது அல்ல.

5. அறிவிப்புகள்

அ. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 9 (1) வது விதியின்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :—

1. திரு. பி. எச். பாண்டியன்
2. திரு. பொ. சிகாமணி
3. திரு. என். கிட்டப்பா
4. திரு. ர. ஜெபமணி

ஆ. நாகப்பட்டினம் தொகுதி உறுப்பினர் பதவி விலகல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாரூர் (செட்யூல்டு வகுப்பு) சட்டமன்றப் பேரவை தொகுதி உறுப்பினர் திரு. தாழை மு. கருணாநிதி அவர்கள் நாடாளுமன்றத்திற்கு (ஏழாவது

லோக்சபை) தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளதால் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் பதவியினின்றும் 18–1–1980 முதல் விலகிக் கொண்டுள்ளார் என்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் 190-வது பிரிவு 3 (பி) உட்பிரிவின்படி அப் பதவி விலகல் அத் தேதியிலிருந்து என்னால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவு

### (அ) இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்ற பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இச் சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10–30]

## 7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்

திரு பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, "ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும் :—

'1980—ஆம் ஆண்டு, சனவரி திங்கள் 30 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்''. என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு வ. மு. சும்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்

---

255-262-ம் பக்கங்களில் ஆளுநர் உரை இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது. அதன் தமிழாக்கம் 263-272-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.